

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2026) சென்னை எம்.ஜி.எம். பீச் ரெசார்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் உள்பட போட்டியின் நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் ”தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம் என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழா கண்காட்சி முகாம் நடைபெற்றது இதில் பங்கேற்ற கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நினைவு பரிசு வழங்கினார்.

### உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் – ஜன.1 முதல் அமல்!

# அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார் முதல்வர்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 13-

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தி அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார் முதல்வர் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 12.1.2026 தேதிய தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் அரசு இயந்திரத்தை இயக்கும் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்ட கால ஏக்கமாக பழைய ஓய்வூதிய திட்டம் இருந்தது. அரசு வேலையில் மகிழ்ச்சியோடு பணியாற்றும் ஊழியர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற பின்னர் ஜீவனம் நடத்திட உரிய ஓய்வூதியம் இல்லாமல் திண்டாடி வந்தனர். புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் என்பது மொத்த தொகையையும் ஒரே நாளில் கொடுத்து, அவர்களுக்கு வீட்டுக்கு அனுப்பும் முறையாகும். எனவே பழைய ஓய்வூதிய திட்டம் என்கிற கோரிக்கையை தொடர்ந்து முன்வைத்து வந்த அரசு ஊழியர்களுக்கு, இப்போது உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தி தமிழ்நாடு அரசு அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின்படி, கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக அளிக்கப்படும். 50 சதவீதத்தில் 10 சதவீதம் ஊழியர்களின் பங்களிப்பாக இருக்கும். ஓய்வூதியதாரர் இறந்தால் அவர் பெற்ற ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் ஓய்வு பெற்றாலும் குறைந்தபட்ச ஓய்வூதியம் அளிக்கப்படும். ஓய்வு பெறும்போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும்போதும், பணிக்காலத்திற்கேற்ப ரூ.25 லட்சம் பணிக்கொடை வழங்கப்படும் என்கிற இத்திட்டத்தின் சாராம்சங்கள் அரசு ஊழியர்களின் வயிற்றில் பாலை வார்த்துள்ளது. இந்நிலையில் ஜனவரி 1ம் தேதி முதல் இந்த திட்டம் அமல்படுத்தப்படும் என அரசாணையும் இப்போது



தினகரன்
ஜனவரி 12, 2026 திங்கட்கிழமை
ஓய்வூதிய மணிமகுடம்

தமிழ்நாட்டில் அரசு இயந்திரத்தை இயக்கும் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்ட கால ஏக்கமாக பழைய ஓய்வூதிய திட்டம் இருந்தது. அரசு வேலையில் மகிழ்ச்சியோடு பணியாற்றும் ஊழியர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற பின்னர் ஜீவனம் நடத்திட உரிய ஓய்வூதியம் இல்லாமல் திண்டாடி வந்தனர். புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் என்பது மொத்த தொகையையும் ஒரே நாளில் கொடுத்து, அவர்களுக்கு வீட்டுக்கு அனுப்பும் முறையாகும். எனவே பழைய ஓய்வூதிய திட்டம் என்கிற கோரிக்கையை தொடர்ந்து முன் வைத்து வந்த அரசு ஊழியர்களுக்கு, இப்போது உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அமல் படுத்தி தமிழ்நாடு அரசு அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில், அரசு ஊழியர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அகவிலைப்படியும் அள்ளி கொடுக்கப்பட உள்ளது. 2003ம் ஆண்டு முதல் அரசு பணியில் சேர்ந்தவர்களுக்கு தங்கள் எதிர்காலம் குறித்த கவலைகள் எப்போதும் இருந்தது. திராவிட மாடல் அரசு தற்போதைய அறிவிப்பின் மூலம், அவர்களது பிரச்சினைகளை துடைத்தெறிந்துள்ளது. இத்திட்டத்தால் தி.மு.க. அரசுக்கு பெருகி வரும் ஆதரவை பொறுத்து கொள்ள முடியாமல், இப்போதும் முன்னாள் முதல்வர் இ.பி.எஸ். போன்றோர், அரசு ஊழியர்களை தி.மு.க. அரசு வஞ்சிக்க நினைப்பதாக வசைபாடி வருகின்றனர்.

உண்மையில் அரசு ஊழியர்களை கடந்த காலங்களில் வஞ்சித்தது யார் என திரும்பி பார்த்தால் தெரியும். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஏற்படுத்திய வடுக்களை இன்னமும் அரசு ஊழியர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கடந்த 2003ம் ஆண்டில் 1.7 லட்சம் அரசு ஊழியர்களை பணிநீக்கம் செய்ததும், எஸ்மா, டெஸ்மா சட்டங்களை ஏவியதும் அ.தி.மு.க. ஆட்சிதான். புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டமும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்திலேயே கொண்டு வரப்பட்டது. அரசுக்கு கிடைக்கிற மொத்த வருவாயில் 94 சதவீதம் அரசு ஊழியர்களுக்கே செலவாகிறது என வாய் கிழிய பேசியவர்களை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஞாபகப்படுத்தி பார்க்க வேண்டிய காலக்கட்டமிது.

மொத்த மக்கள்தொகையில் 2 சதவீதம் உள்ள அரசு ஊழியர்களுக்கே அனைத்தையும் செலவிட்டால், மற்ற மக்களுக்கு எதை செய்வது என வாய் கூசாமல் அன்று சவடால் விட்ட அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் கறைகளை, இன்று திராவிட மாடல் அரசு மெல்ல மெல்ல துடைத்து வருகிறது. அதையும் பொறுக்க முடியாமல், இன்று எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி பொங்குவதை அரசு ஊழியர்கள் மனதில் கொள்ள வேண்டும். எண்சாண் உடம்புக்கு தலையே பிரதானம் என்பதை உணர்ந்த தி.மு.க. அரசு, அதில் மணி மகுடத்தை இப்போது சூட்டியுள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# கடமலை மயிலை ஒன்றியத்தில் மாரத்தான் போட்டி!

## கம்பம் நா.ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. – மகாராஜன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்!

தேனி, ஜன 13-

தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி தெற்கு மாவட்ட தி.மு.க .சார்பில் திராவிடப் பொங்கல் மற்றும் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டமாக மாரத்தான் போட்டி நடைபெற்றது.

இதில் 1100 இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மாரத்தான் போட்டிகளை தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன். ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் தலைமை தாங்கி கொடியசைத்து போட்டியைத் தொடங்கி வைத்தார்கள். கடமலைக்குண்டு பத்திர காளியம்மன் கோவில் கலை அரங்கில் தொடங்கிய இந்தப் போட்டியானது வருசநாடு பேருந்து நிலையம் வரை சுமார் 13 கிலோமீட்டர் தொலைவிற்கு நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில், 13 கிலோமீட்டர் இலக்கை வெறும் 40 நிமிடங்களில் கடந்து நித்திஷ் குமார் முதலிடத்தைப் பிடித்தார். அவரைத் தொடர்ந்து கருத்த பாண்டி இரண்டாம் இடத்தையும், தினகரன் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். வெற்றி பெற்ற வீரர்கள் அனைவருக்கும் சுழற்கோப்பைகளும், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில, மாநில தீர்மான குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடமலை மயிலை ஒன்றிய செயலாளர்கள் வக்கீல் சுப்பிரமணி, தங்கப் பாண்டி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுத் துறை அணி துணை அமைப்பாளர் சேது ராஜா, மாவட்ட விவசாய அணி தலைவர் ஜெயபால் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எம். எஸ். மாடசாமி, மாவட்ட பிரதிநிதி குறிஞ்சி மாடசாமி, ஒன்றிய நிர்வாகிகள் தென்னரசு, சின்னக்காளை, நீதிராஜன், துரைசிங்கம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வீரர்களை வாழ்த்தினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குமணந்தொழு பிரபாகரன் , கடமலை மயிலை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் வைகை நகர் பிரபாகரன், ஸ்டீபன் ஆகியோர் நன்றி உரையாற்றினார்கள்.

### பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனாரின் மணிமண்டபத்தை திறக்க வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

இராமநாதபுரம், ஜன. 13-

இராமநாதபுரம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனாரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை திறந்து வைக்க வரும் 17 ஆம் தேதி வருகை தரும் தமிழ்நாடு முதல்வரை 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக வரவேற்பு அளிக்க வேண்டும் என பரமக்குடியில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவிடம் அருகே 3 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளது.

இந்த மணிமண்டபத்தை வரும் 17 ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க பரமக்குடி வருகை தர உள்ளார். இதனைத்தொடர்ந்து, பரமக்குடியில் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் சத்தியமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம், வனத்துறை அமைச்சர் ஆர்எஸ்.ராஜ கண்ணப்பன் கலந்து கொண்டு வரும் 17 ஆம் தேதி தியாகி இமானுவேல் சேகரனாரின் திருவுருவ சிலையுடன் கூடிய மணி மண்டபத்தை திறந்து வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வரை 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் பங்கேற்று சிறப் பான வரவேற்பு அளிக்க வேண்டும். விருது நகரில் வரும் 23 ஆம் தேதி இளைஞரணி தெற்கு மண்டல நிர்வாகிகள் மாநாட்டிற்கு அதிகளவில் நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும் என தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள் வேல்முருகன், கொடி சந்திரசேகர், அருண், சுதர்சன், முன்னாள் அமைச்சர் சுந்தரராஜன், மாநில இளைஞரணி துணைச்செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் முருகவேல், திசைவீரன், மாநில நிர்வாகிகள் திவாகரன், நல்லசேதுபதி, குணசேரகன்,ரவி சந்திர ராமவன்னி, விஜயகதிரவன், வ.து.ஆனந்த், தூவல் ராமர், நாகநாதன், பாஸ்கரன், நகர் மன்ற தலைவர்கள் சேது கருணாநிதி, நாசர்கான், மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர்,பேரூர் மற்றும் துணை அமைப்புகள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில், நகர செயற்குழு கூட்டம், தட்டாஞ்சாவடி நகர கழக அலுவலகத்தில் பண்ருட்டி நகர மன்ற தலைவர் – நகர கழக செயலாளர் க .இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகின்ற ஜனவரி 26 தஞ்சையில் டெல்டா மண்டல மகளிரணி சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் மாநாடு நடைபெற உள்ளதை முன்னிட்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பண்ருட்டி நகரக் கழகத்தை சார்பில் மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நகர அவைத் தலைவர் ராஜா ,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத், நகர மாணவர் அணி அமைப்பாளர் பார்த்திபன் மற்றும் வார்டு செயலாளர்கள், வட்ட பிரதிநிதிகள், மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவையொட்டி விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வானூர் சட்டமன்ற தொகுதி கிளியனூர் மேற்கு ஒன்றியத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் சமபந்தி விருந்து வழங்கினார். கிளியனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் புஷ்பராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், கண்டமங்கலம் ஒன்றிய குழு தலைவர் ஆர.எஸ்.வாசன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வி.எம்.ஆர்.சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தைலாபுரம் தகவல் தொழில்நுட்ப அணி ஊராட்சி அமைப்பாளர் A.வினோத்குமார் ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.